[5th March 1968

Tamil as medium of instruction in Colleges

*172 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minis er for Education and Industries be pleased to state—

(*a*) the names of colleges in Tamilnad where seats were allotted for the Tamil medium of instruction this year and the number of seats so allotted ;

(*b*) the number of applications received for the allotted seats ;

(*c*) the number of seats which remain vacant without being filled up ; and

(*d*) whether the students who took Tamil medium applied for a change-over to English medium ?

கல்லூரிகளில் பயிற்சி மொழியாகத் தமிழ்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகக் கல்லூரிகளில் இந்த ஆண்டு தமிழ் மட்டும் போதனு மொழியாகக் கொண்டு எந்தெந்த கல்லூரியில் எத்தனை இடங்கள் ஒதுக்கப்பட்டன ?

(இ) ஒதுக்கிய இடங்களுக்கு எத்தனை மனுக்கள் வந்தன ?

(உ) எத்தனை இடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் காலியாக இருக்கின்றன ?

(எ) தமிழைப் போதனு மொழியாக எடுத்த மாணவர்கள் ஆங்கிலப் படிப்புக்கு மாற வேண்டுமென மனுச் செய்தனரா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) இதுவரையில் கிடைத்திருக்கும் புள்ளிவிவரப்படி புகு முகவகுப்பு, பி.ஏ. வகுப்புகளில் தமிழ்மொழியில் பயிற்சி பெற ஏற்பாடு செய்திருக்கும் கல்லூரிகளின் எண்ணிக்கையும், மாணவர்களின் எண்ணிக்கையும் கொடுக்கப்பட்டிருக்கிறது :—

	அரசினர் கல்லூரி.	மானியம் பெறும் கல்லூரி.	மொத்தம்
புகுமுக வகுப்பு—			
(அ) தலைப்பாடங்களில் தமிழில் பயிற்சி பெற வசதி உள்ள கல்லூரிகளின் எண்ணிக்கை.	26	57	83
(இ) 6-7-1968-ல் தமிழ்ப் பயிற்சி மொழியான வகுப்புகளில் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை.	2,091	4,273	6,364
(உ) பி.ஏ. வகுப்பு பி.ஏ. வகுப்பில் தமிழ்ப் பயிற்சி மொழியாகக் கொண்ட கல்லூரிகளின் எண்ணிக்கை.	16	32	48
(எ) தமிழ்ப் பயிற்சிமொழியான வகுப்பில் உள்ள மாணவர்கள் எண்ணிக்கை.	559	1,238	1,797

உறுப்பினர் விரும்பும் முறையில் முக்கியமான கேள்வி பிரிவு (இ), (உ) and (எ)-க்கு விவரங்கள் கிடைக்கவில்லை.

5th March 1968]

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, எனக்குக் கிடைத்த தகவல்படி 90 சதவிகித மாணவர்கள், "நாங்கள் தமிழ் படிக்க மாட்டோம் என்று சொல்லி, ஆங்கிலத்திற்குப் போகவேண்டுமென்று சொல்வது அரசிற்குத் தெரியுமா ? மனுச் செய்தவர்களுக்குத் தமிழிலிருந்து வேறு பாடம் மாற்றிக் கொள்ள அரசு அனுமதி கொடுத்திருக்கிறதா ? அவ்வாறு கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சென்ற ஆண்டு தமிழில் புகுமுக வகுப்புகளுக்கு ஒதுக்கியது 7,600 இடங்கள். அதில் பாடம் எடுத்துக் கொண்ட 6,364 மாணவர்கள் தமிழை எடுத்துக்கொண்டார்கள். மீதியுள்ள 1,230 இடங்கள் நிரப்பப்படவில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : மற்ற பாடங்களுக்கு கிராக்கி இருக்கும் போது, இதிலே மட்டும் 1,230 இடங்கள் காலியாக இருக்கக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : இதற்கு மாணவர்கள் வந்து சேர்ந்தால் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். சேர வரவில்லை. அது தான் அதற்குக் காரணம்.

Schools run without Government Grant.

*173 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether anybody is running a school without receiving any grant from the Madras Government ;

(*b*) if so, the names of persons and the places wherein they run such schools ; and

(*c*) whether the Education Department has approved those schools ?

அரசாங்க நிதி உதவி பெருத பள்ளிகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக சர்க்காரின் எவ்வித நிதி உதவியும் பெருமல் யாராவது பள்ளிகள் நடத்துகிறார்களா ?

(இ) ஆமெனில், யார் யார் எங்கெங்கு அத்தகைய பள்ளிகள் நடத்துகிறார்கள் ?

(உ) அந்தப் பள்ளிகளுக்கு கல்வி இலாகா அங்கீகாரம் அளித்து இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) கண்கார்டியா பயிற்சிப்பள்ளி, ஆம்பூர், பிரசன்டேசன் கான் வென்ட் ஆங்கிலோ இந்திய உயர்நிலைப்பள்ளி, கோடைக்கானல்.

(உ) ஆம்.

Gandhi Statue

*174 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Works to pleased to state—

(*a*) whether any representation has been received by the Madras Government to remove the existing Gandhi's Statue at Marina and to substitute another statue of Gandhi in its stead ; and

(*b*) if so, the action taken thereon ?